தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 9-12-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## இந்தியஉழவியல் குழுமத்தின் தங்கப் பதக்கம்

முனைவர்.சி. ஜெயந்தி, பேராசிரியர் (உழவியல் துறை) மற்றும் இயக்குநர், (பயிர் மேலாண்மை), தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம், அகில இந்திய உழவியல் அமைப்பின் 2014-ம் ஆண்டிற்கான இந்திய உழவியல் குழுமத்தின் தங்கப்பதக்கம் (ISA Gold medal) அளிக்கப்பட்டுள்ளது. முனைவர் ஜெயந்தி தேசிய அளவில் இவ்விருதினைப் பெறும் முதல் பெண் உழவியல் துறை விஞ்ஞானி என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விருதானது உழவியல் பணி மற்றும் குறிப்பாக ஒருங்கிணைந்த பண்ணையைத் திட்ட ஆராய்ச்சிகளின் சீரிய பங்களிப்பிற்காக அளிக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட ஆராய்ச்சிகளின் முடிவுகள் மாநில அளவில் பல்வேறு பகுதி விவசாயிகளிடம் பயன்பாட்டில் உள்ளது. மேலும் இவரின் ஒருங்கிணைந்த பண்ணைய திட்டம் பற்றிய ஆராய்ச்சி கூறுகள் தேசிய அளவில் உழவியல் ஆராய்ச்சியாளர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் தொடர்பாக பல ஆராய்ச்சி திட்டங்களை அரசாங்க துறைகள் மூலம் நிதி உதவி பெற்று செயல்படுத்தியுள்ளார். எட்டு புத்தகங்களையும், 75 தேசிய மற்றும் உலக அளவிளான ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளதுடன் தமிழக விவசாயிகள் பயன்பெறும் வகையில் 100-க்கும் மேலான பொதுக் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

முனைவர் ஜெயந்தி அவர்கள் பல தேசிய விருதுகள் குறிப்பாக இந்திய உழவியல் ஆராய்ச்சிக் குழுமத்திடம் இருந்து சிறந்த ஆராய்ச்சி கட்டுரைக்கான விருதினையும், இந்திய உரக் குழுமத்திடம் இருந்து சிறந்த ஆராய்ச்சியாளருக்கான விருதினையும், 2005-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் சிறந்த ஆராய்ச்சியாளர் விருதையும் பெற்றுள்ளார். இந்திய உழவியல் குழுமத்தின் சிறந்த அறிவியலார் விருதினை 2012-ம் ஆண்டு பெற்றுள்ளார்.

மக்கள் தொடர்பு அலுவலர்